மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்வி பொருட்டான தேசிய நிலையத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, நிதியத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுமற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 107 ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 02 ஆம் இலக்க மானுடவியல், சமூகவியல் வழிகாட்டல்கோவையின் 26 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகச் சட்டத்தின் 108(1)பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையானபிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) ஒத்ததாக இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடுசெய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்வி பொருட்டான தேசிய நிலையத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிலையத்தினால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிமூலம் ஈட்டப்படும் வருமானங்களைக ணக்குகளில் பதியும் கொள்கை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 பிரகாரம் கணக்கீட்டு குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அதன்பிரகாரம் முன்னைய ஆண்டு சார்பாக மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ரூபா 132,000 ஆன கற்கைநெறி வருமானங்கள் மீளாய்வாண்டின் வருமானங்களாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தன.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின்படி கொடையாளிகளிடமிருந்து பெறவேண்டியதாக காட்டப்பட்டிருந்த ரூபா 643,528 ஆன தொகையில் ரூபா193,518 தொகை மீளாய்வாண்டில் கிடைத்திருந்தபோதிலும் அது PhD/MPhil Grants Receivable கணக்கிற்கு செம்மையாக்காமல் மீளாய்வாண்டிற்கான PhD அரச மானிய வருமானங்களாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தன.

(ஆ) 2011 மற்றும் 2014 ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த முறையே ரூபா 72,500 மற்றும் ரூபா.140,000 ஆன வளிப்பதனாக்கிகள் 02 பொறிகளின் பெறுமதி குறித்த ஆண்டுகளில் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் பதிவதற்குப் பதிலாக புனரமைப்பு செலவினங்களாக பதியப்பட்டிருந்தமையினால் நடைமுறையல்லாத சொத்துக்கள் குறித்த பெறுமதியினால் குறைத்து காட்டப்பட்டிருந்தன. மேலும், குறித்த சொத்துக்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதாக ரூபா 2,649,084 ஆன திறைசேரி மானியப் பெறுவனவு காசுப் பாய்வுக் கூற்றின் நிதி நடவடிக்கைகளின் கீழ் ரூபா 450,374 ஆக காட்டப்பட்டிருந்தமையினால் காசுப் பாய்வுக் கூற்றினுள் நிதி நடவடிக்கைகள் ரூபா.2,198,710 குறைத்து காட்டப்பட்டிருந்தது.

**2.3 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

---

2005 இன் 02 ஆம் இலக்க மானுடவியல், சமூகவியல் வழிகாட்டல்கோவையின் 16(1) ஆம் பிரிவின்படி நிலையத்தின் பணிப்பாளர் முழுநேர அலுவல்களில் ஈடுபடவேண்டிய அலுவலராக இருந்தபோதிலும், 2011 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு மேற்கொள்ளப்பட்ட தினமான 2018 யூன் 30 ஆம் திகதி வரையிலும் குறித்த பதவி பொருட்டு முழுநேர பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 15 மில்லியன் மற்றும் ரூபா 10 மில்லியன் காசு முறையே மீளாய்வாண்டின் ஏப்ரல் 03 மற்றும் யூன் 29 ஆம் திகதிகளில் மீளப் பெற்றிருந்தபோதிலும் அதற்காக ''ரிஜன்ட் கவுன்சிலின்'' அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3. நிதிசார் மீளாய்வு**

---

**3.1 நிதிசார் விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் நிதிசார் விளைவு ரூபா.1,237,687 மிகை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 211,222 விளைவித்திருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 1,026,465 ஆல் வளர்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூ. 2,429,760 ஆல் அதிகரித்தமை மேற்படி வளர்ச்சிக்கு பிரதான காரணமாக விளங்கியது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வுசெய்கையில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 166,709 ஆன மிகை மீளாய்வாண்டளவில் விலகலுடனாக ரூபா 1,237,687 வரை வளர்ச்சியடைந்திருந்தது. இருப்பினும், நிதிசார் விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் பொருட்டான தேய்மானம் ஆகியவற்றை மீண்டும் சீராக்கும்போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 10,027,236 ஆன பங்களிப்பு மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 16,724,789 வரை தொடர்ந்து வளர்ச்சியடைந்திருந்தது.

**4. செயற்பாட்டுமீளாய்வு**

---

**4.1 செயலாற்றல்**

---

**4.1.1 திட்டமிடுதல்**

---

01/2014 ஆம் இலக்க மற்றும் 2014 பெப்ருவரி 17 ஆம் திகதிய அரச நிதிச்சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நிலையம் சார்பாக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) இயைபான ஆண்டிற்கு நாளதுவரைப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அமைப்புசார் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியினர் விபரங்கள்

(ஆ) இயைபான ஆண்டில் வருடாந்த வரவுசெலவினை அடிப்படையாகக்கொண்ட முன்னுரிமையின்படி தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், செயற்பாட்டிலுள்ள காலவரையறை

### 4.1.2 செயற்பாட்டுத்தன்மையும் மீளாய்வும்

---

(அ) 2017 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்தின்படி பிரதான இலக்குகள் மற்றும் துணை நோக்கங்களை எய்துவதற்கு பயன்படுத்திய தந்திரோபாயங்கள் மற்றும் செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு ஏற்புடையதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i)** பட்டப்பின் பட்ட கற்கைநெறிகள் பொருட்டு ஏற்கனவே மானியங்கள் பெறப்பட்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் 50 பயனாளிகளுக்கு நிதி வசதிகளை அளிப்பதற்கு ரூபா 60 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் 41 பயனாளிகளுக்கு நிதி வசதிகளை அளிப்பதற்காக ரூபா 35 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ii)** பல்கலைக்கழக கல்விசார் பதவியினரில் 80 பேருக்கு மானியங்களை வழங்குவதற்கு ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் பதவியினரில் 21 பேருக்கு மானியங்களை வழங்குவதற்காக ரூபா 15 மில்லியன் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(iii)** ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பல்கலைக்கழக கல்விசார் பதவியினர்களை ஊக்குவிக்கும் நோக்கில் 13 கற்கைநெறிகளை நடாத்தி 300 அங்கத்தவர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 08 கற்கைநெறிகளை நடாத்தி 107 அங்கத்தவர்களை பயிற்றுவித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

**(iv)** பல்கலைக்கழக கல்விசார் பதவியினர் 40 அங்கத்தவர்கள் பொருட்டு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவமிக்க விரிவுரைகளை ஒழுங்குசெய்தல் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில் ஆராய்ச்சிகள் தேடுதலை பிரபல்யப்படுத்தல் கீழான 02 செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு ரூபா 0.1 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. இங்கு முதலாவது செயற்பாட்டின் கீழான சிறப்பு விரிவுரை நடாத்துதல் மற்றும் 02 சஞ்சிகைகளை அச்சிடுதல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அத்துடன், இரண்டாவது செயற்பாட்டிற்கு ஏற்புடைய ஆராய்ச்சி கருத்தரங்கிற்கு முன்வைப்பதற்கு 200 பிரித்தெடுப்புக்கள் (Abstract) சேர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 48 பிரித்தெடுப்புக்கள் மட்டுமே மீளாய்வுசெய்யப்பட்டு அச்சிடப்பட்டிருந்தன.

**(v)** ஆராய்ச்சியாளர்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் நூலக வசதிகளை விருத்திசெய்தலின் கீழ் மையப்படுத்திய களஞ்சிய முறையொன்றை உருவாக்குவதற்கு ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இயைபான பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(vi)** Excel/Access செயலமர்வு பொருட்டு ரூபா 0.32 மில்லியன் ஒதுக்கப்பட்டு அத்தொகைமூலம் 120 பேர்களின் பங்குபற்றுதலுடன் 05 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 0.21 மில்லியன் செலவிடப்பட்டு 02 நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவற்றிக்கு 46 பேர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

**(ஆ)** கலாநிதி மற்றும் மெய்யியல் முதுமானி பட்டமளிப்பு வழங்குகையில் செயலாற்றலுக்கு ஏற்புடைய பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை கலாநிதி மற்றும் மெய்யியல் முதுமானி பட்டங்கள் பொருட்டு அளிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 60 முதல் 46 வரையான வீச்சில் காணப்பட்டபோதிலும் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் அளிக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 46 முதல் 15 வரையான வீழ்ச்சி பெறுமதியைப் பெற்றிருந்தது.

(ii) 2005 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை நிறுவனத்தினால் PhD & Mphil பட்டங்கள் பொருட்டு அளிக்கப்பட்டிருந்த 38 பயனாளிகளின் பட்ட நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு இறுதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டியபோதிலும், 2017 ஆம் ஆண்டு இறுதியளவிலும் அவர்களது பட்ட நடவடிக்கைகளை பூர்த்தி செய்திருக்கவில்லை. அதற்காக, அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த மானியங்களின் பெறுமதி ரூபா 34,317,407 ஆக இருந்தது.

(iii) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டு வரை நிலையத்தினால் கொடையாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த மானியங்கள்மூலம் பட்ட நடவடிக்கைகளை உரியவாறு தொடராமையினால் இரத்துச்செய்யப்பட்டிருந்த 04 பயனாளிகளிடமிருந்து நிலையத்திற்கு அறவிடப்பட வேண்டியிருந்த தொகை ரூபா 4,380,044 ஆக இருந்தது.

### 4.2 நிதியத்தின் குறை பயன்பாடு

03 நிகழ்ச்சித்திட்டங்கள் பொருட்டு வரிசை அமைச்சிடமிருந்து 2015 முதல் 2017 வரையான காலப்பகுதியினுள் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 7,147,509 மூலதன மானியங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் சம்பளங்கள் மற்றும் கூலிகளில் அதிகரிப்பு ரூபா 1,395,039 அதாவது நூற்றுக்கு 35 ஆக இருந்ததுடன் மேலதிக நேரம் அடங்கலாக ஏனைய படிகளின் அதிகரிப்பு ரூபா 3,176,185 அதாவது நூற்றுக்கு 105 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் மொத்த ஊழியர் கிரயம் 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 4,571,224 ஆல் அதாவது நூற்றுக்கு 65 ஆல் அதிகரித்திருந்ததுடன் தலா நபர் ஊழியர் கிரயத்தில் அதிகரிப்பு 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 464,827 அதாவது நூற்றுக்கு 92 ஆக இருந்தது.

(இ) 2013 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை வருடாந்த சம்பளங்கள் மற்றும் கூலிகளின் பெறுமதியானது, மேலதிக நேரம் மற்றும் ஏனைய படிகளில் குறிப்பிடப்பட்ட சதவீதம் 2013 முதல் 2017 வரை முறையே நூற்றுக்கு 75 , 102 , 165 ,157 மற்றும் 114 உயர் சதவீதமாக காணப்பட்டன.

## 5. நிலைபேறானஅபிவிருத்தி

-----------------------------------

### 5.1 நிலைபேறானஅபிவிருத்தி இலட்சியங்களையும் இலக்குகளையும்அடைதல்

-----------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய மற்றும் என்பி/எஸ்பி / எஸ்டிஜீ /17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதாரஅலுவல்கள் அமைச்சு செயலாளரினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பிலான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனமும் செலாற்றவேண்டியிருப்பதுடன், மீளாய்வாண்டுக்கு ஏற்படையதாக மானுடவியல் மற்றும் சமூகவியல் உயர் கல்வி பொருட்டான தேசிய நிலையம் தமது விடயப்பரப்புக்கு கீழான பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதுபற்றி அறிந்திருக்கவில்லை.

(ஆ) மேற்படி ‘2030 நிகழ்ச்சிநிரல்’ தொடர்பாக கூட்டுத்தாபனம் அறிந்திராத காரணத்தினால் அதன் பணிகளுக்கு சம்பந்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலட்சியங்கள், இலக்குகள் மற்றும் குறித்த இலக்குகளை அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் இலக்குகளின்படி அடைதலை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-------------------------------------------

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும்கட்டுப்பாட்டுஅம்சம் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) மானியங்கள் மற்றும் கற்கைநெறி தொடர்பிலான உள்ளகக் கட்டுப்பாடு | மானியங்கள் வழங்கப்பட்டுள்ள கொடையாளிகளின் பட்ட நடவடிக்கைகளை உரிய காலப்பகுதியினுள் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் அத்துடன் அதற்கிணங்க செயலாற்றாத கொடையாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள மானியங்களை மீள அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) திட்டமிடுதல் | செயல்நடவடிக்கை திட்டத்தின் விலகல்களை இழிவுபடுத்தி இயைபான இலக்குகளை அடையக்கூடிய விதத்தில் நடவடிக்கை எடுத்திருக்காமை. |